# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)

## 79



**Sri Sankar Publications**
**KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.**
§‡ò¾¢Ã (ÅÂø) Å¢¿¡Â¸ ¬ÄÂõ,,Óý§ÉŠÅÃõ, º¢Ä¡Àõ, , Äí¸¡.
**Author - B.S.Sarma**

**July 2014** ஜுலை (ஆனி /ஆடி)

## Editorial

'Path to Darma' the monthly magazine, published by KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 79th issue this month. The foremost intention of this magazine is to converse the perceptions linked to Hinduism and its ceremonial rituals, customs and dharma, to the anxious readers. The elucidation and investigation from the readers are appreciated.

B.SivaramakrishnaSarma,
KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka. July, 2014

## Opinion




Dear Sarma,

Thank you for June issue of Dharma Neri. It was worth reading for the information it throws on ALAYA VAZHIPADU.

With kind regards,

Vseshadri, Chennai,S.India.



**Give a brief account of Sesame seeds , and are there any special spiritual significance in using this seed in religious rituals?**

Sesame seeds may be the oldest condiment identified by man. Sesame seeds are highly valued for the different types of oils which are exceptionally resistant to rancidity. The scientific name for sesame seeds is *Sesamum indicum*.

Sesame ( *Sesamum indicum* ) is an angiosperm ( a flowering plant ) of the genus Sesamum. Numerous wild relatives occur all over the world. Sesame seed is one of the oldest oilseed crops known, domesticated well over 3000 years ago. It is widely established in tropical regions around the world and is cultivated for edible purposes of the seeds, which grow in pods.

Sesame (Sesamum *indicum* ) is an annual plant grows up to 50 to 100 cm (1.6 to 3.3 ft) tall, with opposite leaves 4 to 14 cm (1.6 to 5.5 in) in length with an entire margin; they are broad lanceolate, to 5 cm (2 in) wide, at the base of the plant, narrowing to just 1 cm (0.4 in) broad on the flowering stem.

The flowers are tubular, 3 to 5 cm (1.2 to 2.0 in) long, yellow, in colour with a four-lobed mouth. The colour of the flowers may differ with some being white, blue, purple or other shades.

The fruit of Sesame plant (Sesamum *indicum* ) is a capsule, usually pubescent, rectangular in section and characteristically grooved with a short triangular beak. The length of the capsule differs from 2 to 8 cm. The fruit naturally dehisces (splits opens) to liberate the seeds by splitting along the septa from top to bottom or by means of two apical pores.

Sesame seeds are about 3 to 4 millimeters long, 2 millimeters wide and 1 millimeter thick . The size, form and colours vary with the thousands of varieties now known. The seed coat (testa) may be smooth or ribbed. The seeds are ovate, slightly flattened and somewhat thinner at the eye of the seed (hilum) than at the opposite end. The weight of the seeds is between 20 and 40 milligrams.

The most common varieties of sesame are black and off-white coloured. Other common colours found are buff, tan, gold, brown, reddish, gray and pink.

Sesame seed is very commonly available with its seed coat removed (decorticated) of the black coloured variety, which should not be used in Hindu rituals. The Sesame seeds when the coat is removed loose the vitality of sacredness.

**The elements present in Sesame seeds are;**

i. Copper (Cu)
ii. Pottasium (K)
iii. Cromium (Cr)
iv. Nickal (Ni)
v. Rubedium (Rb)
vi. Strontium (Sr)
vii. Lead (Pb)
viii. Manganese (Mn)
ix. Calcium (Ca)
x. Phosphorus (P)
xi. Magnesium (Mg)
xii. Iron (Fe)
xiii. Zinc (Zn)
xiv. Molybdenum (Md)
xv. Selenium (Se)

**The fatty acids present in Sesame seeds are;**

i. Palmitic Palmitoleic acid(hexadecanoic acid)
ii. Stearic acid(octaecanoic acid)
*iii. Oleic acid* (cis-9-octadecenoic acid)
iv. Linoleic acid(cis,cis-9,12-octadecadienoic acid)
v. Eicosenoic acid (cis-11-Eicosenoic acid)

The significance of offering sesame seeds (during tiltarpan ritual) to departed ancestors

‘Trup’ means satisfying others. The word ‘Tarpan’ derived from the root word ‘Trup’. Offering water to God, Sages, ancestors’ soul and human beings and satisfying them by the religious rituals is termed ‘tarpan’ (Shraddha/ tharpanam). The term 'sraddah', in Sanskrit language means 'sincerity'.

Tila tarpan means offering sesame seeds mixed in water to the deceased ancestors’ souls. Black sesame seeds should be used for Shraddha.The main purpose of carrying out the religious ritual ‘tarpan’ is to satisfy the soul of the ancestors etc.of the deceased where the names are mentioned while performing the rites of the Tarpan whereby , the performer request to bestow happiness on him the performer.

Sesame seeds are generally available in two varieties, black and white. There are buff, tan, gold, brown, reddish, gray and pink coloured varieties. It is mentioned in texts describing rituals, that the black sesame seeds should be used for Shraddha. The black variety of sesame seeds, are preferred to use in Shraddha. because the demons are believed not obstruct the ritual of Shraddha.

Prior to the offering sesame seeds during the religious rituals to ancestors, the performer should pray to Almighty requesting to absorb the offering by the sesame seeds. Also appeal for the spiritual emotion (bhaav) that the ancestors of the performer of the rituals to be present in the subtle and receive the offering of the sesame seeds and water.

Subsequently, the performer who is doing the rituals offers the sesame seeds (charged with the divine principle) and unbroken rice (akshataa), to ancestors by pouring water continuously, little by little over the sesame seeds placed on the palms (hand kept concave position) so that the seeds fall into a metal vessel preferably a copper container or plate kept on the floor.
Sesame seeds (of black coloured) have a higher capacity to absorb spiritual purity (saattviktaa) and they remove the spiritually impure component (raja tama). While offering sesame seeds (tiltarpan), based on the spiritual emotion (bhaav) is mentioned in religious texts (samskaras).
The black covering around the Sesame seeds represents the symbolic subtle body of the ancestors (arrived in the plate) and the spiritual purity (saattviktaa) of the subtle body of the performer increases. Thus they gain the energy required to move-on to the next spiritual plane (loka/world)

The demons do not obstruct the ritual of Shraddha when black sesame seeds are used in the ceremonies. **Jaiminiya Ghruya sutra (2.1), Boudhayan Dharmasutra (2.8.8) and Boudhayan Ghruya sutra** mention that sesame seeds should be sprinkled all over the house, on the day of Shraddha and sesame seeds mixed in water should be given to the invited priests (Brahmins).
During this rituals, the performer gains spiritual purity (saattviktaa) by offering sesame seeds to Almighty and if his spiritual emotion (bhaav) is accelerated. Owing to this fact, the performer offering sesame seeds (tiltarpan) to ancestors gets protected from all distress. This helps to reduce the overall distress due to ancestors. The sense of gratitude of the performer, towards our ancestors and faith in Sastras is very essential. In the rituals of shraddha, there is rite involves pinda-daan (offering of pindas kept on the darbha grass) cooked rice mixed with ghee and black sesame seeds) by pouring water from the right hand to the ancestors. ‘Tila tarpan’ means offering sesame seeds mixed in water to the deceased ancestors’ souls. Tila tarpan (one of the rites of Shraddha) should be offered to the souls of same number of ancestors for whom the shraddha to be performed. The ritual of Tila tarpan is carried out before ‘Darsha shraddha’. Tila tarpan is performed on the following day of the shraddha in the event of annual shraddha. It is to be noted that Tila tarpan is not performed during Nandi Shraddha, Sapindi Shraddha etc.

Only black variety of sesame seeds should be used for all rituals concerning to Manes. If the tharpan falls on the following weekdays -thithis- star etc. one has to make use of “ akshadha” (uncooked rice mixed with turmeric powder mixed in water) together with sesame seeds (Tila seeds), as it is considered as not auspicious to use Tila (sesame seeds ) only on these days.

In Hindu mythology and faiths, shows that the sesame seeds symbolically represent *immortality* and the

God Vishnu's consort Sri Devi ( Lukshmi) herself representing the properties of the sesame seed, as such it is considered as the most auspicious oil as equal as Ghee to be used in Hindu rituals.During the ritual of Shraddha, Sesame seeds mixed with jagary or sugar id offered ('nivedyam') to the pandas. This jagary mixed with Sesame seeds are eaten by all those participate in the rituals during the lunch. Sesame seed is one of the nine components of 'navadhanya" used for homa (offering to the fire) rituals.It is customary to offer cooked rice mixed with black seasame seeds to crow after the tarpana rituals before any body takes the lunch on the tarpana day

In the procedural steps prescribed in the ritual of 'abisheka' (Anointment) of the items to be followed in a temple ceremony are the following order of anointments is given in ***Sakalagama sangraham***.

i. Sesamum oil (oil extracted from Sesame seeds )
ii. Panchagavya ♣
iii. White rice flour
iv. Nellimulli -powder
v. Turmeric- powder
vi. Panchamrita *
vii. Milk (unboiled cow's milk)
viii. Curd
ix. Ghee
x. Honey
xi. Sugarcane juice
xii. Fruit juice ♥
xiii. Tender coconut
xiv. Cooked rice
xv. Sandal paste
xvi. Snapannir(rose water)

Note ♠ Panchamrita

Rasapanchamrita - A mixture of cow's milk, curd, ghee (boiled butter), sugar and honey.A trace of Kasthuri (Musk of Musk deer), Korochana,Karpura (Cinnamomum camphora),Ealam (Elettaria cardamomum),Karambu (Eugenia caryophyllata-inflorence), Thakkolum (Calyptranthes jambaeana), Kacholum (Guilandina bonduc) spices are added

♥ Pala (fruit) Panchamrita - A mixture of the fruits mango, jack and banana

♣ Panchagavyam - The mixture of the cow's milk, curd, ghee, water and dung.

***Terminology of Shraddha***

**Pitar**

When a human being dies, its subtle body gets freed from the dead body after performing the ritual of shraddha. The ritual performed on the death anniversary according to Hindu Almanac, to appease departed ancestors, subtle bodies and it gets position in the subtle plane meant for souls of dead persons. At that moment it assumes the designation of Pitar.

**Parvan**

After performing Sapindikaran shraddha rituals, on the death anniversary, according to Hindu Almanac, to appease departed ancestors, subtle bodies. The rituals performed on the subtle bodies one day prior to one-year completion after the death of the person is called Sapindikaran shraddha

At this stage the soul that has assumed the designation of Pitar now joins other Pitars and then gets further categorized as Parvan. Also, it gains authority so as to allow its descendants to perform Parvan shraddha

**Pitrutrayi (Trio in Pitars)**

In general son of the dead person has authority to perform shraddha. In the absence of the son of the dead person, other options are explored.The subtle body has been prepared assuming the son as being the person who performs the shraddha.The subtle body is invoked as **'pitha'** (father of the son performing Shraddha). One generation before, that is, the father of dead person is referenced as **'Pithamahar'** (grandfather of the son performing Shraddha). The grandfather of the dead person is referred to as **'Prapitahmahar'** (great grandfather of the son performing Shraddha). The earlier generations than these are not counted in trios of Pitars (Pitrutrayi), because it is assumed that they are liberated.The Shraddha tharpan is also performed to the subtle body is invoked as **'math'** (mother of the son performing Shraddha). One generation before, that is, the mother of dead person is referenced as **'pithamahi'** (grandmother,ie.mother of the father of the son performing Shraddha). The grandfather of the dead person is referred to as **'Prapitamahai'** (great grandfather ie,mother of grandfather of the son performing Shraddha).

# ஆலயத்தில் பூஜை முறை

பூக்களால் அர்ச்சித்தலை தமிழில் "பூஜை" என்பர் "பூசு" என்ற சொல் எண்ணையை உடலில் பூசுதல் அல்லது சந்தனக் குழம்பையோ, குங்குமச் சாந்தையோ விம்பத்தில் பூசுதலிலிருந்து "பூசை" என்ற பதம் வந்துள்ளதாக ஒரு சிலர் கருதுகின்றனர். சனாதன தர்மமாகிய இந்து சமயத்தவர் தொன்று தொட்டு பூஜை முறையை கடைப்பிடித்து வந்துள்ளனர். கோயில்களில் பூஜைகள் நடாத்தப்படுகின்றன. சிலர் தங்கள் வீடுகளிலும் பூஜையை நடாத்துவர். ஒரு நற்காரியத்தைத் தொடங்கும் முன்பு பூஜை செய்து அக்காரியம் இனிதே நிறைவுற கடவுள் அருளை வேண்டியும், பொதுவாகக் கூட்ட ஆரம்பத்திலும் பூஜை செய்யப்படுகின்ற வழமை இந்து சமயத்தவர்களிடம் உண்டு. இதனால் ஆன்மீக அலைகள் எங்களிடம் தோன்றும். மந்திரம், தேவார பாராயணம், பஜனை போன்றவை பூஜையின் கிரியையாக அமைந்துள்ளன.




ஆகம முறைப்படி இறைவனுக்கு மரியாதை செலுத்துமுகமாக இடம்பெறும் கிரியையே பூஜை எனப்படும் பிரார்த்தனையுடன் இறைவனை பீடத்தில் எழுந்தருளச் செய்து மந்திர உச்சாடனம் பாடல், பாராயணம் போன்றவை மூலம் ஆன்மீகத் தொடர்பை இறைவனுடன் ஏறபடுத்துவதே பூஜையின் அம்சங்களாகும். இலிங்கம், விக்கிரகம், இயற்கையாக உருவாகிய தெய்வீகப் பொருள், பஞ்சபாத்திரம் அல்லது சிறுவட்டகையில் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தி, தெய்வீகத் தொடர்பு ஏற்படுத்துவது பூஜையின் குறிக்கோளாகும். கிரகங்களின் வக்கரிப்பாலும், கிரகபீடைகளினால் ஏற்படும் துன்பங்களுக்கு நிவிர்த்தியாகவும் சிலகிரியைகளுடன் பூஜை செய்து கிரக தோஷத்துக்கு பரிகாரம் செய்யப்படுவது வழக்கமாகும். விரிவாகச் செய்யப்படும் கிரியைகளால் ஒரு சிலாவிக்கிரகமோ, ஐம்பொன் விக்கிரகமோ தெய்வத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள உதவுகின்றது. பக்தரிடமிருந்து இறைவனிடத்திலும் இறைவனிடமிருந்து பக்தரிடத்தும் நேரடியான ஆன்மீகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு விக்கிரக ஆராதனை மூலாதாரமாக விளங்குகின்றது. முனம் ஒன்றினைந்து அனுபவிக்கும் தெய்வீகத் தொடர்பு பக்தனைப் புனிதமாக்கி விடுவதோடல்லாமல் அவரது பௌதிக சக்தியை கூடுதலான வளமுடையதாக்கிவிடுகின்றது.

கண்களாலோ, செவிகளினாலோ, நாசியினாலோ, ஸ்பரிசத்தாலோ, அல்லது புத்தியாகிய அறிவு என்னும் பரந்த ஆற்றலினாலோ கண்டறிய முடியாத இறைவனை எமது புலன்களால் அறியும் ஆற்றலுக்கு அழைத்து அறிந்து கொள்ளக் கூடியதாக முனிவர்கள் சிறந்த வழியைக் காட்டியுள்ளனர். எமது புலன்களுக்கு எட்டக் கூடியதாக சிலை, படம், நீர், தீ (நெருப்பு) இரத்தினக்கல் அல்லது மூர்த்தியின்

ரூபம் - ஏதாவது ஒன்றை உபாசனை செய்து வழிபட்டு ஐம்புலன்களாலும் உணர்ந்து கொள்ளுதல் மூலம் நாம் எமது மனதை ஒருமுகப்படுத்தலாம். தினமும் ஒருவர் நம்பிக்கையுடன் செய்யும் பூஜை, நைவேத்தியம் முதலானவற்றை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பாக்கியமாகவே கருதலாம்.

பூஜையை நடத்தும் வழிபாட்டு முறையில் மந்திரங்களை உச்சாடனம் செய்தும் (ஓதியும்) பஜனைப் பாடல்களைப் பாடியும், பழங்கள், தாம்பூலம், மலர்கள், மாலைகளை போன்றவற்றை அர்ப்பணித்துத் தூப, தீப ஆராதனைகள் செய்தல் மிக முக்கியமாகும். வேதமந்திரங்களிலிருந்து புனிதமான பகுதிகளை உச்சாடனம் செய்வதன் மூலம் இறையருளையும், வரப்பிரசாதங்களையும் நாம் பெறலாம். தொன்மையான வழிபாட்டு முறையில், பூஜை ஆற்றும் சிவாச்சாரியாரே மந்திரங்களை ஓதி, வழிபாட்டினை நடாத்துவார். இறைவனின் புகழ், மகிமை முதலியனவற்றை எல்லா பக்தர்களும் ஒருங்கே இணைந்து பாடுதல் பஜனையாகும். மந்திரங்களும் பஜனைகளும் ஆழ்ந்த தீவிரமான அர்த்தமுடையவையாகையால் அவைகளை நாம் பாடும்போது ஒலி அலைகள் ஆலயத்துள் எங்கும் பரவுவதோடல்லாமல் ஆலயச் சூழலிலும் வியாபிக்கின்றது. ஆராதனையின் முடிவில் கற்பூர ஆரத்தி செய்தபின் பக்தர்கள் தரிசனமாக இருகரங்களாலும் ஜோதியைத் தொட்டு, சூடான உள்ளங்கைகளால் கண்களையும் ஒற்றி, இறையருள் பெறுகின்ற முறையில் தமது வாழ்க்கையை மேலோங்கும்படி செய்கின்றனர்.



பதினாறு உபசாரங்கள் பூஜையில் அடங்கியுள்ளன. சில இடங்களில் அவை மிகுந்தும் சுருக்கமாகவும் அமையும்.

**பதினாறு (16) உபசாரங்கள் :**

ஆவாஹனம் - தேவர்களை அழைத்து வரவேற்றல்

ஆசமனம் - ஆசனம் கொடுத்தல்

பாத்தியம் - பாதங்களைக் கழுவுதல்

அர்க்கியம் - கைகளைக் கழுவுவதற்கு நீர் கொடுத்தல்

ஆசமனீயம் - தூய நீர் கொடுத்தல்

பஞ்சாமிர்த ஸ்நாதம் - மூர்த்தியை பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு (சர்க்கரை) முதலியவற்றால் அபிஷேகம் செய்தல்

உத்வார்த்தனஸ்நாதம் - பன்னீராலோ அல்லது வாசனைத் திரவியத்தாலோ அபிஷேகம் செய்தல்.

ஸ்நாதம் - சுத்தமான நீரினால் அபிஷேகம் செய்தல்.

வஸ்திரம் - ஆடை அளித்தல்

ஆசமனீயம் - நீர்கொடுத்தல்

யக்ஞ்ஜோபவீதம் - புதிய பூணூல் அணிவித்தல்

சந்தனம் - சந்தனச் சாந்து சாத்துதல்

சௌபாக்கிய சூத்திரம், மங்கள சூத்திர, ஆபரணம் அளித்தல்

அட்சதை - குங்குமம், மஞ்சள் பூசிய வெண் அரிசி அளித்தல்

மாலை மலர்கள் மலர்மாலைகளை சூடுதல்

தர்ப்பை - தர்ப்பைப்புல் அணிதல் பனியில் நனைந்த அறுகம் புல்தளிர் முதலியவற்றைக் கொடுத்தல்

சௌபாக்கிய திரவியம், சிந்தூரம்ஈ குங்குலியம் முதலியவற்றை தனித்தனியோ, சேர்த்தோ கொடுத்தல்

தூபம் - குங்குலிய, சாம்புராணி, நறுமண தூபப்புகை, காட்டுதல்

தீபம் - ஆராத்தி - ஒற்றைத் தீபக்கால் காட்டுதல்

நைவேத்தியம் - பிரசாதமாக தேன், நெய், சர்க்கரை கலந்த பொங்கல் அமுது, மோதகம், வடை முதலியவற்றை நிவேதனம் செய்தல்

ஆசமனீயம் - நீர் கொடுத்தல்

பழவகை – பல கனிவகைகளைக் கொடுத்தல், பழசாறு கொடுத்தல் அளித்தல்

தாம்பூலம் - வெற்றிலை பாக்கு வாசனைத் திரவியம் அளித்தல்

தட ்சிணை - காணிக்கை சமர்ப்பித்தல்

நீராஞ்சனம் - தீபம் காட்டுதல், கற்பூர தீபம் காட்டுதல்

புஷ்பாஞ்சலி - மலரஞ்சலி சமர்ப்பித்தல்

பொதுவாக எல்லாத் தெய்வங்களுக்கும் ஒரே நடைமுறையான பூஜாவிதிகள் பத்ததிகளில் இல்லை அந்தந்த மூர்த்தங்களுக்கு அமைவாக பூஜைகள் நடாத்தப்படும். வழிபடுவோர் ஆசாரசீலராயும், மனத்தூய்மையுடையோராகவும் இருக்க வேண்டுமென புராண, இதிகாசங்கள் எடுத்துக் கூறுகின்றன. வேதகாலத்தில் விரிவான யாகங்கள் நடைபெற்றன. காலப் போக்கில் அவற்றிற்குப் பதிலாக பூஜைகள் ஆராதனைகள் இடம் பெறலாயின.

பிரார்த்தனையின் முக்கியக் குறிக்கோள், இறைவனிடம் முழுமையான சரணமடைவதை ஐயமின்றி அறிதலாகும். இறைசக்தியாலேயே பிரபஞ்சம் இயங்குதலையும், இச்சக்தியின்றி ஒரு அணுவும் இயங்கமாட்டாது என்பதை ஏற்று அசையாதனவற்றையும் நாம் இறைவனின் அம்சங்களே என்ற தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உப ஆகமங்களிலிலும், மற்றும் மூன்று ஆகமங்களிலும் இந்துக்கோவில்களில் நடாத்தப்படும் பூஜைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. சிவ ஆகமங்கள் இருபத்தெட்டுடன் அவ்வவற்றுக்கான உப ஆகமங்களும் உள்ளன. வைணவ ஆகமங்கள் ஐந்து உள்ளன. பஞ்சராத்திரம், வைகானசம் ஆகிய இரண்டும் மேற்கூறப்பட்டவற்றுள் அடங்கும். இவற்றுக்கு நூற்று எட்டு பத்ததிகள் உள்ளன.

பூஜை புனஸ்காரக் கிரியைகளை மிக விரிவாகச் செய்து தான், இறை அருளைப் பெறமுடியும் என்பதில்லை. இவற்றைச் செய்வதற்காக பத்திகளை கண்ணப்பன் நாயனார் போன்ற பக்தர்கள் படித்தறியவே இல்லை. தீவிரபக்தியினாலும், முற்பிறப்புகளில் செய்த புண்ணியங்களினாலும் மூன்றே மூன்று தினங்களில் இறையருளைக் கண்ணப்பநாயனார் பெற்றார். இளைஞரான நம்பியாண்டார் நம்பி என்ற சிறுவன், தன் தந்தையார் வேறு கடமையின் நிமித்தம் அயலூருக்குப் போயிருந்தபோது பூஜாகைங்கரியத்தைச் செய்து ஒரே நாளில் தன்தீவிர பக்தியினால், பொல்லாப் பிள்ளையாரை தான் நைவேத்தியம் செய்த திருவமுதை ஏற்று அருந்தும்படி செய்தார்.

**ஹோமம்**

அக்கினியை முன்னிலைப்படுத்திப் பிரார்த்தித்து ஒரு குறிப்பிட்ட தெய்வத்துக்கு செய்யப்படும் சிறப்பான கிரியை ஹோமம் எனப்படும். வேதங்கள் கூறும் அடிப்படைத் தத்துவங்களிலிருந்து ஹோம சம்ஸ்கார கிரியைகள் தோன்றியன. வேதங்கள் ஞானத்தை உயர்ந்த நிலையை அடிப்படையாகக் கொண்டவை. மனிதகுலத்தை நெறிப்படுத்தி சீரியதோர் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதே வேதங்களின் உயர்ந்த குறிக்கோளாகும். மனிதன் வாழும் சூழலை மாசற்றதாக்கி நோய் நொடிகளின்றி சீரிய வாழ்வு வாழவும், வாழ்க்கையின் முழுப்பயன்களையும் அனுபவிக்கத் தேவையான வேண்டிய வளங்களைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்வதே எல்லா ஹோமங்களின் நோக்கமாகும். சூரியனே சக்தியின் மூலாதாரமாக உள்ளது. சூரியனின் பிரதிநிதியாக அக்கினி கருதப்படுகின்றது. ஹோமங்களைப் பற்றிய பழைய நூல்களில் அக்கினி

மூலமாக அர்ப்பணிக்கும் தேவ அல்லது தெய்வ ஹவிஸ் சூரியனுக்கே அர்ப்பணமாகின்றது எனக்கூறப்படுகின்றது. சூழலை மாசுபடுத்தும் விரும்பத்தகாத மூலப்பொருள்களை அழித்து ஒழிப்பதற்கும், மனிதனுடைய வாழ்வுக்கு வேண்டிய சக்திகளைப் பெருக்குவதனால் சூழல் உச்ச நலன் விளைக்கும் பிராந்தியமாக மாற்றமடையச் செய்வதற்கும் ஹோமங்கள் உதவும் எனவே இரு வகைகளிலும் ஹோமத்தில் அர்ப்பணிக்கப்படும் பொருட்களும், மற்றும் மரத்துவ மூலிகைகளும் மனித வாழ்வுக்கு பல்வேறு வழிவகைகளில் உதவுகின்றன. அக்கினியை வளர்த்து வழிபடும் முறையால் பெறக்கூடிய நன்மைகளினால் வசீகரிக்கப்பட்ட மக்கள் பல்வேறு ஹோமங்களை செய்ய முற்பட்டனர். இதிலிருந்து மக்களால் ஆதரிக்கப்பட்டுவரும் அத்தகைய வைதிகக் கர்மாக்கள் பலன் கருதியே செய்யும் குறிக்கோளையுடைய தோடல்லாமல் ஆன்மீக வளர்ச்சிப் பேற்றுக்கும் வழிகோலுவதாக கருதப்படுகின்றது.

ஒவ்வொரு ஹோமச் சடங்கும் முன்பே குறிப்பிடப்பட்ட பத்ததிகளின் வழிமுறைப்படியே ஆற்றப்படுகின்றது. குறிப்பிட்ட துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழும் வேத வித்துக்களாகிய புரோஹிதர்களே ஹோமங்களை வழுவின்றி நடாத்தி வைக்க வல்லவர்கள். ஹோமத்திரவியங்கள், சமித்துக்கள் போன்றவை ஒவ்வோர் ஹோமத்துக்கும் வேறுபட்டவைகளாகும்.



***கணபதி ஹோமம்*** என்பது ஏனைய ஹோமங்கள் செய்தவற்கு முன்னர் முன்னோடியாக கணேசப்பெருமானைக் குறித்துச் செய்யப்படுவது. கணபதி தடைகளை நீக்கி குறித்த கருமத்தை இனிதே முடித்து வைப்பவர். ஆகையால் கணபதி ஹோமத்தை முறைப்படி முதலில் புரோகிதர்கள் செய்வர்.

**மகாமிருத்யுஞ்சய ஹோமம்**

சிவபெருமானைக் குறித்து இந்த ஹோமம் செய்ப்படுகின்றது. ஒருவரின் ஆயுள் குறைந்து துர் மரணத் சம்பவிக்காமல் இருக்க, ஆற்றப்படுவதாகும். ஆகையால் கணபதி ஹோமத்தை முறைப்படி முதலில் புரோகிதர்கள் செய்வர். மகாமிருத ஜனன தினங்களில் ஆயுள் விருத்திக்காக காமிகமாகச் செய்யப்படுவதாகும். சுகவாழ்வு, பிணிநீக்கம், ரோகபயம், என்பன மிருத்தியுஞ்ச ஹோமபலன்களாகும்.

**நவக்கிரஹ ஹோமம்**

இந்த ஹோமம் ஒன்பது கிரகங்களுக்கும் பிரிதிசெய்யும் பொருட்டு செய்யப்படும். ஜோதிட சாஸ்திரத்தின்படி இவ்வொன்பது கிரகங்களும் முறையே, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு சுக்கிரன், சனி, இராகு, கேது என்பவை. இவ்வொன்பதில் இராகுவும் கோதுவும் நிழற்கிரகங்கள் எனப்படும். இந்தக்கிரகங்களின் அமைப்பின்படியே ஒருவரின் ஜாதகம் அமைவதால் எமது எண்ணம், தொழில் போன்ற எல்லாச் செயற்பாடுகளும் நடந்தேறுகின்றன. கிரகங்கள் நலமற்ற திசையில் இருக்கும் போது ஜாதகருக்கு

துன்பங்கள் சம்பவிக்கின்றன. இந்த கிரகங்களின் தோஷ நிவர்த்திக்காக நவக்கிரக ஹோமம் செய்து கிரகங்களுக்கு பிரீதி செய்து ஜாதகரின் வாழ்க்கையில் அனுகூலமான பலன்களைப் பெறலாம்.

**நட்சத்திர பூஜை**

நட்சத்திரங்களின் சஞ்சாரங்கள் எமது வாழ்க்கையில் முக்கியமான அம்சங்களை வகிக்கின்றது என வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. வேத சாஸ்திரத்தின்படி ஜோதிடத்தில் நட்சத்திரம் ஜாதகரின் வாழ்க்கையின் கண்ணாடியாக விளங்குகிறது. விருப்பு வெறுப்புகள் தோற்றம் உருவக அமைப்பு அம்சங்கள் என்பன நட்சத்திரங்களின் சஞ்சாரங்களின் பலனால் அமைகின்றன. ஒருவருடைய கிரகதோஷ காலத்தில் நட்சத்திரப் பிரீதிசெய்வதால், நலமற்ற சம்பவங்களை நிவிருத்தி செய்யலாம்.

ஆயுஷ்ஹோமம் - பிள்ளையின் முதல் வருட முடிவில் ஆயுள் தேவரின் ஆசிக்காக செய்யப்படுவது

**நட்சத்திரத்தின் படி அவற்றுக்குரிய இராசிகள்**

***இராசி நட்சத்திரம்***

மேடம் (Aries) அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கண்

இடபம் (Taurus) கார்த்திகை முதற்கால், ரோகிணி மிருகசீரிடத்துது முன்அரை

மிதுனம் (gemini) மிருகசீரிடத்து பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்

கர்க்கடகம் (Cancer) புனர்பூசத்துநாலாங்கால், பூசல், ஆயிலியம்

சிங்கம் (Leo) மகம், பூரம், உத்தரம் முற்கால்

கன்னி (Virgo) உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன் அரை

துலாம் (libra) சித்திரையின் பின் அரை, சுவாதி, விசாகம் முன் முக்கால்

விருச்சிகம் (Scorpio) விசாகம் நாலாங்கால், அனுஷம், கேட்டை

தனு(saggitarius) மூலம், பூராடம், உத்தராடம் முதற்கால்

மகரம் (Capricorn) உத்தராடம் பின்முக்காலம், திருவோரம், அவிட்டம் முன்அரை

கும்பம் (Aquarius) அவிட்டம் பின்அரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்

மீனம் (Pisces) பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி

**Some important facts:**
**Day**
The Hindu day calendar starts with local sunrise. It is allotted five "properties"(*anga*s) namely,

01 The *tithi* active at sunrise
02 The *vaasara* or weekday
03 The *nakshatra* in which the moon resides at sunrise
04 The *yoga* active at sunrise
05 The *karana* active at sunrise.

**Tithi**

The angular distance (measured anticlockwise) between the sun and moon as measured from the earth can vary between 0° and 360°. This is divided into 30 parts. Each part ends at 12°, 24° etc. The circle ends at 360°. The time spent by the moon in each of this parts (i.e. the time taken for the angular distance to change by 12°) is called one *tithi*.

***paksha*-s or fortnights** The month has two *paksha*-s or fortnights.

1. The first 15 *tithi*-s constitute the bright fortnight or *shukla paksha* .
2. The next 15 *tithi*-s constitute the dark fortnight or *krishna paksha*. *tithi*-s are indicated by The 15th *tithi* of the bright fortnight (full moon) is called *pūrnimā* and the 15th *tithi* of the dark fortnight (new moon) is called *amāvāsyā*.

The *tithi* in which the moon is at the time of sunrise of a day is taken to be the *tithi* for the day.

**Stars and Nakshatra**

The stars included in one or more *nakshatra*.

| Tamil | Sanskrit | Stars fot the *nakshatra*. |
|---|---|---|
| Ashwini, | Ashvinī | β and γ Arietis |
| Bharani, | Bharanī | 35, 39, and 41 Arietis |
| Kaartikai , | Krittikā | Pleiades |
| Rohini, | Rohinī | Aldebaran |
| Mirugaseridam, | Mrighashīrsha | λ, φ Orionis |
| Thirvaathirai, | Ārdrā | Betelgeuse |
| Punarpoosam, | Punarvasu | Castor and Pollux |
| Poosam, | Pushya | γ, δ and θ Cancri |
| Aaylyam, | Āshleshā | δ, ε, η, ρ, and σ Hydrae |
| Makam, | Maghā | Regulus |
| Pooram, | Pūrva Phalgunī | δ and θ Leonis |
| Uthiram, | Uttara Phalgunī | Denebola |
| Hastham, | Hasta | α to ε Corvi |
| Chittirai, | Chitrā | Spica |
| Swaathi, | Svātī | Arcturus |
| Visaakam, | Vishākhā | α, β, γ and ι Librae |
| Anusham, | Anūrādha | β, δ and π Scorpionis |
| Kettai, | Jyeshtha | α, σ, and τ Scorpionis |
| Moolam, | Mūla | ε, ζ, η, θ, ι, κ, λ, μ and ν Scorpionis |
| Pooradam, | Pūrva Ashādhā | δ and ε Sagittarii |
| Uthiraadam, | Uttara Ashādhā | ζ and σ Sagittarii |
| Thiruvonam, | Shravana | α, β and γ Aquilae |
| Avittam, | Shravishthā | α to δ Delphinis |
| Sadayam, | Shatabhishaj | γ Aquarii |
| Poorataathi, | Pūrva Bhādrapada | α and β Pegasi |
| Uthirattathi, | Uttara Bhādrapada | γ Pegasi and α Andromedae |
| Revathi, | Revatī | ζ Piscium |